466

உ

குமரன் துணை.

பகழிக்கூத்தர் அருளிச்செய்த

திருச்செந்தூர்ப்

பிள்ளைத் தமிழ்.

மதுரை, புஸ்தக வியாபாரம்,

இ. ராமசாமிக் கோனாரால்

... எக்ஸெல்ஸியர் பிரஸில்,

...பிக்கப்பெற்றது.

...925. அணா—5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
23 JUL 1925
MADRAS

2466

O26:38·2119TTR
N25
128857

மதுரைத் தமிழ்வித்வான்

ஸ்ரீ: நா கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

சாவித்ரி சத்யவான்.

ஓர் இனிய தமிழ் நாடகம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசன சாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவே இருக்கும்.

1, 2 பாகம்	விலை அணா	0—4—0
ஸ்ரீகிருஷ்ணலீலா	,,	0—4—0
நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகங்கள்	,,	0—4—0
ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்.		0—1—0
ஷை இராமாயணத் திருப்புகழ்காவடிச்சிந்து,		0—2—0

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள்	விலை அணா	0—6—0
புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள்	,,	0—5—0
ஷை இரண்டாம் பாகம்	,,	0—5—0
லலிதாங்கிசரித்திரம் ஷையாரியற்றியது	,,	0—8—0
வள்ளியம்மை சரித்திரம் ஷை	,,	0—6—0
அதிரூப அமராவதி ஷை	,,	0—6—0
சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை	,,	0—8—0

உமேலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமநாடகம் (படங்களுடன்)	விலை ரூ	2—0—0
பக்திரஸக் கீர்த்தனங்கள்		0—5—0
ஷை இரண்டாம்பாகம்		0—5—0

உ

குமரன் துணை.

பகழிக்கூத்தர் அருளிச்செய்த

திருச்செந்தூர்ப்

பிள்ளைத்தமிழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUL 1925
MADRAS

894.811
2858

மதுரை, புஸ்தக வியாபாரம்,

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

இதன் விலை அணா—5.

1.78857

மதுரைத் தமிழ்வித்வான்

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

சாவித்ரி சத்யவான்.

ஓர் இனிய தமிழ் நாடகம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசன சாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவே இருக்கும்.

1, 2 பாகம்	விலை அணா	0—4—0
ஸ்ரீகிருஷ்ணலீலா	,,	0—4—0
நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகங்கள்	,,	0—4—0
ஷை சாந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்.		0—1—0
ஷை இராமாயணத் திருப்புகழ்காவடிச்சிந்து,		0—2—0

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள்	விலை அணா	0—6—0
புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள்	,,	0—5—0
ஷை இரண்டாம் பாகம்	,,	0—5—0
லலிதாங்கிசரித்திரம் ஷையாரியற்றியது	,,	0—8—0
வள்ளியம்மை சரித்திரம் ஷை	,,	0—6—0
அதிரூப அமராவதி ஷை	,,	0—6—0
சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை	,,	0—8—0

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமநாடகம் (படங்களுடன்)	விலை ரூ.	2—0—0
பக்திரஸக் கீர்த்தனங்கள்		0—5—0
ஷை இரண்டாம்பாகம்		0—5—0



திருச்செந்தூர் கோயில்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
23 JUL 1925
MADRAS

உ

குமரன் துணை.

திருச்செந்தூர்ப்

பிள்ளைத்தமிழருளிச்செய்த

பகழிக்கூத்தர் சரித்திரம்.

இவர், சேதுமன்னர் அரசாட்சிக்குள்ளாகிய செம்பி நாட்டைச் சேர்ந்த சன்னாசிக் கிராமத்தில் வைணவப் பிராமணகுலத்தினராகிய தர்ப்பாதனரென்னு மறையவர் அருந்தவத்தால் அவருக்கு மைந்தராகப் பிறந்து, வளர்ந்து வேதாந்தங்களை யுணர்ந்து மெய்ப்பொருளை யறிந்தது போலவே, தமிழ் இலக்கிய விலக்கணங்களையும் ஐயந்திரிபறக்கற்று வல்லவராய் எல்லாரும் நன்கு மதிக்கத்தக்க ஒரு பெரிய வித்துவானாக விளங்கியிருந்தனர்.

அங்ஙன மிருக்குங்காலத்தி லொருநாள் வயிற்றுவலி நோயாற் பிடிக்கப்பட்டுப் பெரிதும் வருந்தி, அந்நோய் நீங்குதற்குத் தக்க மருந்துகள் பலவாக வுண்டும் நீங்காமையால் இனி, எம்பெருமானாகிய திருச்செந்தூரி லெழுந்தருளியிருக்குங் குமாரக்கடவுளைப்பாடி, இந்நோயைத்தீர்த்துக் கொள்ளுவேனென்று நினைத்துப் பிரார்த்தித்து, அக்கடவுள்மீது பிள்ளைத்தமிழ் எனப்பெயரிய இவ்வருமைப்பிரபந்தத்தைப்பாடி முடித்து, நோய் நீங்கப்பெற்று மனமகிழ்ச்சியடைந்து திருவருளை வியந்து, திருச்செந்தூருக்குச்சென்று, முருகக் கடவுளைத் தரிசனஞ்செய்து, அவர் திருச்செவி

உ

குமரன் துணை.

பகழிக்கூத்தர் அருளிச்செய்த

திருச்செந்தூர்

பிள்ளைத் தமிழ்.

சிறப்புப்பாயிரம்.

நேரிசை வெண்பா.

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—நந்தேர்
திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன். 1

அவையடக்கம்.

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்த
ரெத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார்—முத்தி
புரக்குமரன் தந்தகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி. 2

நூற்பயன்.

மருநாண் மலர்ப்பொழி லுடுத்ததட மெங்குமலை
வாய்கொழித் தெறியுமுத்தை
வண்டலிடு மெக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கட வுளெங்

குருநாத னொருதெய்வ யானைதன் பாகங்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறும்பிறை முடிக்கும்பிரான்
இருநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமு
மெங்குமுட் டாதளக்கு
மிறைவிதிரு முலையமுத முண்டஞா னம்பெருகு
மெம்பிரா னினியபிள்ளைத்
திருநாம மெழுதுவார் கற்பார்படிப்பார்
செகம்பொது வறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதத் தெய்துவாரே. 3

உ

குமரன் துணை.

திருச்செந்தூர்ப்

பிள்ளைத் தமிழ்.

காப்புப்பருவம்.

திருமால்.

பூமாதிருக்கும் பசுங்களபப்
புயபூதரத்துப் பருகூதன்
போற்றக்ககன வெளிமுகட்டுப்
புத்தேள்பரவப் பொதிகைமலைக்
கோமாமுனிக்குத் தமிழுரைத்த
குருதேசிகனைக் குரைகடற்குக்
குடக்கேகுடிகொண் டிருந்தசெந்திற்
குமரப்பெருமான் றனைக்காக்கத்
தேமாமலர்ப்பொற் செழும்பொகுட்டுச்
செந்தாமரையில் வீற்றிருக்குந்
தேவைப்படைத்துப் படைக்குமுதல்
சேரப்படைத்துப் படைக்குமுயி
ராமா றளவுக் களவாகி
யனைத்துந்தழைக்கும் படிகருதி
யளிக்கும் படைக்குத் தனியேசங்
காழிபடைத்த பெருமாளே. 1

சிவபெருமான்.

உடலவலை குழவி மதியமு நதியு
    முரகமு மொழுகு செஞ்சடைக் காட்டினர்
உமைமுலை குழைய மருவிய புனித
    னுரைகொடு பரவுதொண்டரைக் காத்தவர்
உமிழ்திரை மகர சலதியில் விளையு
    முறுவிட வடவை கண்டமட் டேற்றினர்
உடைமணி கனக பரிபுர முரல
    வொருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்
வடவரை முதுகு நெளிநெளி நெளிய
    வரிசிலை யெனவொ ரம்பினைக் கோத்தவர்
மறுவறு முழுவெ ணிலவெழு முறுவல்
    வளரொளி யிருள்வ னங்கெடப் பூத்தவர்
மருவிய சகள வடிவின ரரிய
    வடகலை தமிழ்வ ளம்பெறச் சேர்த்தவர்
மதுரையி லிறைவ ரிரசத பொதுவர்
    மணமலி புதவு கங்களைப் போற்றது
மிடவிய மதுர வரியளி குமுறி
    பிடறிய களப குங்குமத் தூட்பொதி
இமசல மொழுகு கனதன விரக
    மெழுகுற வனிதை சிந்தையிற் சேர்ப்பனை
இடிபடு முரச முழவுட னதிர
    வெதிர்பொரு கிருதர் தம்படைப் போர்க்கள
மிடமற முதிய கழுதக ணடன
    மிடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய

கடதட வழுவை முகமுள கடவுள்
 கருணையின் முதிய தம்பியைப் பார்ப்பதி
கரமல ரணையில் விழிதுயின் மருவு
 சளிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில்
கடிகமழ் தருவி னிறைமகள் புதிய
 கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய்
கலைமகள் பரவு குமரனை மதுர
 கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே

உமையவள்.

அரிபிரமர் சந்ததம் புகழ்ந்திடு பரசுடைய நம்பர் பங்
கின்மென்கொடி யகிலலோகமு மாதரத்தாற் படைத்தவள்,
அரிவைமடமங்கைமென் கனங்குழை திரிபுரையணங்குகங்
கையம்பிகை யகளமாயனுபூதி யிற்பூத்த பொற்கொடி, யபி
னவைமு குந்தர்தங் கைசுந்தரி யுரகபண பந்திகொண்டகங்
கணி யமுதமூறியபாட லுக்கேற்ற சொற்குயி லறுசமய
முங்கலந்து நின்றவள் மறலிபர வும்ப்ரசண் டசங்கரி யழ
கெலாமிது தானெனப் போற்றுசித்திர,—முரிபுருவ வஞ்சி
திங் கடங்கிய திருமுகம லர்ந்தபைங் கருங்கிளி முதல்விபூ
ரணி ஞானவித்தாய்க் கிளைத்தவள், முருகுவிரி கொந்தளம்
பிறங்கிய மணிமவுலி மண்டலங் கொள் செஞ்சடை முடிம
ணேன்மணி வாலைவற்றாக் குணக்கடன், முகில்முலைசுமந்து
நொந் தசைந்திறு மிறுமெனம ருங்கிரங் கவின்புறு முறுவ
லாடிய கோமளத்தாற் பெருத்தவள், முறைமுறைமு ழங்
குகின்ற கிண்கிணிபரிபுரம லம்புசெம்பதம்புரை முளரிநான்

மலர்வாழ்வெனப் போற்றிகிற்குது,— முரியபதி னெண்
கணங் களுமுசது மறைமுனிவ ரும்பரிந் துதின்கழ லுறுதி
தாலென்ன நாவெடுத்தேத்திகித்தலு, மூளமிகம கிழ்ந்துசெங்
கரங்களின் மலர்கொடுவ ணங்கியஞ் சலென்றமை யுடை
மையாயரு ணீயெனக்காத்தநட்பனை யுடுமுகட திர்ந்துவிண்
டலங்களு மரியபகி ரண்டமும்பி ளந்திட கவுதறுதோமை
யூரனைத்தோற் றமுற்றெழு, முபகிடதமந்த்ரதந் திரந்தனில்
சபையில டங்குமைம் புலன்களி லுவகைகூரும னேகரக்
கூத் தனைப்பொரு,—தரியலர்நெ ருங்குசெங் களம்புகு நிசி
சரர்து ணிந்தவெம் பறந்தலை தழுவுபாடல்வி சாகனைப்பாற்
கடற்றரு, தரளநகை செங்கருங் கணிந்திரை குறமகள்ம
ணம்புணர்ந்த திண்புயசபிலமோகன மார்பனைத்தோட்டி
தழ்ப்பொதி, தழைமுகையு டைந்துவிண் டரும்பிய புதுந
றவு சிந்துபைங் கடம்பணி தருணசீதளவாகனைக் கோட்ட
கத்துயர், சரவணமி லங்கவந் தகந்தனை முருகனைவி ளங்கு
செந் தில்வந்திடுசமரமோகன வேலனைக்காத் தளிக்கவே.

கணபதி.

கருணையின்விழிபடு முதியவடனையுயர் கயிலையி
னெருமுறை யுய்த்தவிதத்தினர்
கனவடகிரிமிசை குருகுலமரபினர் கதைதனை
யெழுதிமுடித்தகருத்தினர்
கலைமதியினையிரு பிளவுசெய்தொருபுடை கதிரெழ
நிறுவிய வொற்றைமருப்பினர்
கடுநுகர்பரமனை வலமுறைகொடுநிறை கனிகவர்
விரகுள புத்திமிகுத்தவர்

பொருவருமிமகிரி மருவியபிடிபெறு பொறுகளி
றெனமிகு பொற்புவிளைத்தவர்
பொதியவிழ்நறுமல ரணைமிசைதமதுடல் புளகம
தெழவொரு சத்திதரித்தவர்
பொதுவறவிடுசுடர் முழுமணியொளிவிடு பொலிவெழு
பவளம தித்தநிறத்தினர்
புகர்முகமுடையவர் குடவயிறுடையவர் புகழிரு
செவியினி றுத்திவழுத்துது
மிருமையுமுதவிய சிவபரசமயமு மிமையவ
ருலகு மளித்தகளிப்பனை
யிசைமுறன்மதுகர முறைமுறைபெடையுட னிடறிய
முகைவிரி செச்சைவனப்பனை
யிளகியபுளகித மலைமுலையரமக ளிகலிய
புலவிய கற்றுமழுப்பனை
யிகல்புரிபரநிசி சரர்குலகலகனை யெனைவழி
யடிமைப டைத்திடுநட்பனை
யருமறையுரைதரு பிரமனையமரர் பிடிதொழ
விடுசிறை விட்டதிறத்தனை
யடியவர்கொடுவினை துகள்படநடமிடு மழகிய
சரணம ளித்தவரத்தனை
யளவறுகலவியின் முழுகியகுறமக ளழகினி
லொழுகியி ருக்குமயக்கனை
யலையெறிதிருநகர் மருவியகுமரனை யறுமுக
முருகனை நித்தல்புரக்கவே. 4

கலைமகள்.

அவனி பருகிய மாறிரு வுந்தியி
லமரு மொருபிர மாவெனு மந்தணன்
அரிய சதுமறை நாவிலி ருந்தவள்
அளவில் பலகலை யோதியு ணர்ந்தவள்
தவள முளரியில் வாழ்வுபு ரிந்தவள்
தவள மணிவட மாலைபு னைந்தவள்
தவள வடிவுள வாணிசு மங்கலி
தனது பரிபுர பாதமி றைஞ்சுதும்
உவரி முதுதிடர் பாயவி டம்பொதி
யுரகன் மணிமுடி தூள்பட மந்தர
முலைய வெறிசுழன் மாருத மெங்கணு
முதறு சிறைமயில் வாகன னின்புறு
கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய
கமட முதுகினி லேறநெ டுந்திரை
கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை நருங்கவி மாலைவி ளங்கவே. 5

அரிகர புத்திரன்.

வரியு நீள்சடி லத்திடை மகுடராசித ரித்தவர்
வளையு நீடுக ருப்புவின் மதுர வாளிதொ டுத்தவர்
அரிய பூரணை புட்கலை யரிவை மாரிரு பக்கமு
மழகு கூறும கிழ்ச்சிய ரடிவி டாமல்வ ழுத்தது
முரிய நான்மறை நித்தலு முறுதி யாகவ ழுத்திய
வுவகை யாசுக வித்துறை யுதவு நாவலன் முற்றிய

பரிய வாளைகு தித்தெழு பரவை சூழுந காக்கிறை
பழநி வேலவ னைப்புகழ் பனுவன் மாலைத ழைக்கவே. 6

பகவதி.

விளையுஞ் செழுந்தே னுடைந்தமுகை விண்டொழுகு
வேண்டா மரைப் பொகுட்டு
வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியள்
வெங்கொலை மடங்கலேறி
வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கணொடு
மயிடாசு ரன்சி கரத்தில்
வலியநட மிடுகுமரி பகவதிச ரோருக
மலர்த்தாள் வணக்கமுறுவாம்
முளையுந் தடந்திரைத் திமிர தமரக்குழி
யுவர்ப்பரு மகரவேலை
யொலியிடுங் குண்டகழி சுவறிமே டாகவே
னுள்ளுறை கருத்துநிருதக்
களையுங் களைந்துகல னணிபுலோமசை தன்மங்
கலநா ணளித்தபெருமாள்
கடிமயில் வாகனப் பெருமா னுவந்தெனது
கவிமாலை கொண்டருளவே. 7

காளி.

காயுங் கொடும்பகைத் தாருகவி நாசனி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணியெண் டோளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி

பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
 பண்ணம் பணத்திமோடி
பரசுதர னுடனடன மிடுசூலி சாமுண்டி
 பாதார விந்தநினைவா
மாயும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி
 யரியசித் திரகவிதைவித்
தாரகவி யிடுமுடிப் புக்குள மயங்காம
 லடியவர்க் கருள்குருபரன்
தேயும் பனிப்பிறைத் திருநுதற் கடன்மகளிர்
 தெண்ணித் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு
 சேவகன் புகழ்பாடவே. 8

ஆதித்தர்.

வெள்ளப் பெருந்துளி யிறைக்கும் பெருங்காற்று
 வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி யொற்றையா ழித்தடந் தேரேறி
 வேதபாரகரி றைஞ்சப்
பள்ளக் கடற்றிரை கலக்கியூ ழியினிருட்
 படலமுழு துந்துடைத்துப்
படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்பொற்
 பாதமலர் சென்னிவைப்பாம்
உள்ளக் களிப்பளு வரிவண்டு பண்பாட
 வோதிம நடிக்கமுள்வா
யுட்குடக் கூன்வலம் புரிமுத்த முமிழநீ
 ரோடையிற் குருகுகாணக்

கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக்
    கடைசியர் நுளைச்சியருளங்
களிகூரு மலைவா யுகந்தவே லனையெங்கள்
    கந்தனைக் காக்கவென்றே. 9

முப்பத்து முக்கோடி தேவர்கள்.

பொதுவி லாடு மத்தற்கு நீடு
    பொருளை யோதி யொப்பித்த சீலர்
புணரி தோய்ந கர்க்குச்ச காயர்
    புலமை நீதி யொப்பற்ற கேள்வர்
குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர்
    குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்கத்தின் மோகர்
    குமரர் காவ லுக்கொத்த காவன்
மதுர கீத விற்பத்தி வாணர்
    மகுடவேணி முத்துத்த ரீகர்
மவுன மோன பத்திக்க லாபர்
    மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்
முதுமை யான சொற்பெற்ற நாவர்
    முனிவர் வேள்வி யிச்சிக்கு மூணர்
முடிவி லாத கற்பத்தி னூழி
    முதல்வர் தேவர் முப்பது மூவரே. 10

காப்புப்பருவம்

முற்றிற்று.

இரண்டாவது

செங்கீரைப்பருவம்.

வெங்காள கூடவிட மெழுகுபற் பகுவாய்
விரித்துமா சுணமுமிழ்ந்த
வெங்கதிர் மணிக்கற்றை யூழியிரு ளைப்பருக
வேய்முத் துதிர்ந்து சொரியக்
கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர்
கடுப்பக் குறுங்கவைக்காற்
கவரியின் பருமுலைக் கண்டிறந் தொழுகுபால்
கதிர்வெயிற் படமுரிந்து
மங்காம லிரசதத் தகடெனச் சுடர்விட
மலைக்குறவர் கண்டெடுத்து
வண்டினைக் கெருவிடுஞ் சாரலிற் கரியகுற
மகளிருள மூசலாடச்
செங்காவி வீழிபருகு பன்னிருகை மேகமே
செங்கீரை யாடியருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே. 1

கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற்
கட்செவிப் பஃறலைநெடுங்
காகோ தரச்சிர னெளிக்கவட பூதரங்
கால்சாய மகரமெறியுங்

துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ்
சுறுக்கெழ முறுக்கெயிற்றுச்
சூரன் பயங்கொளச் சந்த்ரசூ ரியர்கள்செந்
தூளியின் மறைந்திடத்திண்
பொறைகொண்ட சுரர்மருவு மண்டகோளகைமுகடு
பொதிரெறிய நிருதருட்கப்
பூச்சக்ர வாளகிரி கிடுகிடென வச்சிரப்
புருகூதன் வெருவிவேண்டுந்
திறைகொண் டளக்கவரு மயிலேறு சேவகா
செங்கீரை யாடியருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே. 2

ஏர்கொண்ட பொய்கைதனி னிக்குமொரு பேரரசி
னிலைகீழ் விழிற்ப றவையா
மிதுவிற்க நீர்விழிற் கயலாமி தன்றியோ
ரிலையங்கு மிங்குமாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதீ ருகவப்
பாதியுஞ் சேலதாகப்
பற்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கவிப்
படிகண்ட ததிசயமென
நீர்கொண்ட வாவிதனி னிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மதுகொண் டுபோய்
நீள்வரை யெடுத்ததன் கீள்வைக்கு மதுகண்டு
நீதிநூன் மங்காமலே

சீர்கொண்ட நக்கீ ரனைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே. 3

கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக்
கமலமல ரைக்கறித்துக்
கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தன்குழக்
கன்றுக் கிரங்கியோடிக்
கொந்தவிழ் கருங்குவளை யோடைத் தடாகக்
குரப்பைக் கடந்துசெந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்துமீளப்
பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலா மிடறிவெள்ளைப்
பணிலஞ் சொரிந்தநித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலுடைந்து
சிந்தமிக ரா[illegible]யிலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடியருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே. 4

வீறுடை வெங்கதிர்ப் புகர்முகக் கூரிலை
மிகுத்தவே லுறைகழித்து
வெவ்வாய் பிளந்தசிறு கட்பே ரிடாகினிகள்
விளையாட வெங்கவந்த

மாறாட முதுபகட் டுயர்பிடர்க் கரியதிற
மறலியிரு கைசலித்து
மன்றாட வுடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு
மாகமுக டிடைவெ ளியறப்
பாறாட வம்பொற் கிரீடம் பரித்தலகை
பந்தாட விந்தாடவிப்
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம்
பசுங்கொழுங் குறுதிவெள்ளச்
சேறாட வென்றுசிறு முறுவலா டுங்குமர
செங்கீரை யாடியருளே
செந்திறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே. 5

மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி
வைத்தமணி முத்துமாலை
வடபூ தரத்தில்விழு மருவியென வுத்தரிக
மார்பிலூ டாடமன்னுந்
தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத்
தமனியச் சுட்டியாடத்
தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத்
தரலவெயர் வாடமுழுதும்
பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமுலைப்பால்
பருகக் குழைந்துசிறு பண்டியும் தண்டையும்
பாதமும் புழுதியாடச்

சிகரவரை யரமகளிர் சிறுமுறுவ லாடநீ
செங்கீரை யாடியருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே. 6

வேறு.

இந்திர னுஞ்சசி யும்பர வும்படி
யிங்கே வந்தார்காண்
இந்திரை யுங்கர சங்கமு குந்தனு
மிந்தா வந்தார்பார்
அந்தண னுங்கலை மங்கையும் நின்சர
ணஞ்சேர் கின்றார்போய்
அண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தனர்
அஞ்சே லென்றாளாய்
முத்துத டந்திரை யுந்துவ லம்புரி
மொண்டே கொண்டேக
முன்றிறொ றுந்தர ளங்களு மிழ்ந்திட
முந்தூர் நந்தாருஞ்
செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக
செங்கோ செங்கீரை
தென்றன்ம ணங்கமழ் குன்றிபு ரந்தவ
செங்கோ செங்கீரை. 7
வரைபொரு புளகித மலைமுலை யரிவையர்
வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவமணி வடமது
வண்டார் தண்டார்பார்

உரைபொரு கவிஞரு முனிவரு மமரரு
முன்போ லுண்டோதான்
உரையமர் வழிவிழி யடிமையி துளதென
வுன்பா லன்பானர்
கரைபொரு கடறிட ரெழுமயின் மிசைவரு
கந்தா செந்தூரா
கழிமட வனமொடு முதுகுருகு கொருபுடை
கண்சாய் தண்கானல்
திரைபொரு திருநகர் மருவிய குருபர
செங்கோ செங்கீரை
செருவினி லெதிர்பொரு நிசிசரர் தினகர
செங்கோ செங்கீரை. 8

வேறு.

உரைசெய் வரையர மகளிர் முறைமுறை
யுன்பேர் கொண்டாட
வுலகு மிமையவ ருலகு மரகர
வுய்ந்தோ மென்றாட
வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும்
வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ
வந்தார் கண்டாயே
கரையின் மணலிடு கழியி னெடியக
லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபனை யடியில் வலைஞர்க
ணஞ்சூழ் மென்கானில்

திரையில் வளைதவழ் நகரில் வருகுக
செங்கோ செங்கீரை
செருவி னிசிசர திமிர தினகர
செங்கோ செங்கீரை. 9

வேறு.

குறுமுகை விண்ட நெட்டிலைத் தாழை யடியில் விளைந் தமுட்குடக் காயி னினிய குவளை யோடையில் விண்டோ யுந்தேவர், குணலை புரிந்த கற்பகச்சோலை நிழலிடு பந்த ரிட்டபொற் றாணி லளவர் குடிலில் வாசலி னின்றேடுந் தோணி, குழுவொடு வந்து விட்டிளைப் பாறு துறைமணல் வண்டலிட்டுவற் றுத பழைய குமிழி வாவியில் வண்டினந் தாவுங், குரவுநெ ருங்கு மெக்கரிற் கான லுழுநர்ப ரம்பி னெற்குலைத் தாளி விளைய குமர ரூர்சிறு திண்டேர் மென் காவி, லிறுகுகு ரும்பை யொத்தபொற் பார நகிலரி ருந்து வைத்தவைப் பூசலருகி விளைஞ ருடலில் வண்டார் தண் டாரி, லெவருமகிழ்ந்த சித்திரக் சாலை நிழன்மணி துன்று தெற்றியிற் றேவ[illegible]மகுட மிடறு பூமியில் கங்கா ளஞ்சின, மெனமொழி தங்குமற்புதத் தீவில் வணிகரின் வந்த மிக்க பட் டாடை வகையிலெரியு மாரவ டம்பூ ணும்பூணி, விரை கவர் ஞெண்டு முக்குளித் தூறு மளறு கிடங்கில் வித்து வித் தாரத் துரவி லிடுமுள் வேலியில் வெங்கா மன்காண, முறு கவி ளைந்து முற்றி முத்தேறு கரியக ரும்பு சுற்றுசிற்றுலை நிலையின் முதிய தாழியில் வெந்தா றும்பாகின், முடியையவி ளம்பி வைத்துமுட்டாது கடை சிதறுகின்ற கட்குடப்

பாளை முதுகின் முளைகொள் சாலியின் மென்பூ கந்தோறு,
முருகுது ளும்பு கொத்துடைப் பாளை சிதறியு திர்ந்த பித்
திகைப் பீடமறுகின் முதல்வர் தேவியர் பந்தா டுங்காவின்,
முனிவர்வி ரும்பு கற்புடைப்பான்மை கமளிர்கள் மொண்
டெடுத்தகைச் சாலின் மடுவின் முழுகு மேதியில் வம்பே
செஞ்சேல்பாய், செறுவில்வி ளைந்த ொற்குலைக்காயி னுழ
விஞ் டைந் தகட்டியிற் பார மதகு செறியுமேரியின் மண்டு
கம்பானல், செருமிமு ழங்கு கற்பிளப் பானபுடைபின்
விழும்பு னற்பெருக் கான தமர திமிர வாவியிலெங்கே யுந்
தாவுந், திரையில்வ லம்பு ரிக்கணத் தோடு பணிலமு ழங்கு
பட்டினக் காவற் றிகரி முருக வேலவ செங்கோ செக்கீரை,
தினகர ரஞ்ச விட்புலத் தேவர் மகபதி முன்கு வித்த வித்
தார மவுலி திறைகொள் சேவக செங்கோ செங்கீரை. 10

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-20.

மூன்றாவது

தாலப் பருவம்.

அடரும் பருநவ மணிமுடி யமரரு
  மமரர்க் கிறைவனுநீ
டளகைந ராதிய மீரொன் பதின்மரு
  மருமறை முனிவோருஞ்
சுடருந் தருமிரு சுடரும் பரவிய
  தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளு மவரவர் தங்குறை
  சொல்லித் துதிசெய்தார்
படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர்
  பாயும் பகிரண்டம்
பழுமர மென்னப் பனையென நிமிரும்
    பாழிக் கைநீட்டித்
தடவும் புகர்முக தந்திக் கிளையாய்
    தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய்
    தாலோ தாலேலோ. 1

கங்குல் பொருந்திய குவளைக் குழியிற்
    கழியிற் பழனத்திற்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த
    கவைக்கால் வரியலவன்

பொங்கு குறுந்துளி வாடையி னொந்து
பொறுதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற் றுரவிற்
புன்னை நறுந்தாதிற்
கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக்கா யிற்புயல்
கொழுதுஞ் செய்குன் றிற்
சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ
சமய விரோதிக டிமிர திவாகர
தாலோ தாலேலோ 2

வேறு.

தண்டே னொழுகு மொழிமடவார் தாமங்
கொழுதிச் சுருண்டிரண்டு
தமரக் களிவண் டடைகிடந்து தழைத்து
நெறித்த குழற்பாரங்
கொண்டே வெளிந்த தல்லாது குரும்பைக்
களப முலைசுமந்து
கொடிபோன் மருங்குல் குடிவாங்கக் குழையிற்
குதித்த விழிக்கயலைக்
கண்டே வெருவிக் கயன்மறுகக் கனக
வெயின்மா ளிகையுடுத்துக்
ககனந் தடவுங் கோபுரத்தைக் கருதி
வடவெற் பெனக்கதிரோன்

திண்டேர் மறுகுந் திருச்செந்தூர் செல்வா
　　தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா
　　தாலோ தாலேலோ. 3

பாம்பா லுததி தனைக்கடைந்து
　　படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
　　பசுக்கள் வெருவிப் பதறுமற்
காம்பா லிசையின் தொனியழைத்துக்
　　கதறுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னேநடந்த
　　கண்ணன் மருகா முகையுடைக்கும்
பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்
　　புனிற்றுக் கவரி முலைநெரித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு
　　புனலைப் பிரித்துப் பேட்டெகினந்
தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச்
　　செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
　　சிறுவா தாலோ தாலேலோ. 4

மங்கல மங்கல நூலெங்குமொ ழிந்தனர்காண்
　வானோ ரேனோர் போய்
வந்தவ ணங்கினர்மே லந்தர துந்துபிகேள்
　வாரூ டாடா தே

கொங்கைசு மந்திடைநு லஞ்சும ணங்கனையார்
கூடா தூடாரோ
கொண்டவ ரந்தருவா யண்டர்பெருந்தவமே
கோமா னுமாநீ
செங்கம லந்தனிலே பைங்குமு தங்களிலே
சேல்பாய் வானுடா
தென்றலுடன் தமிழ்தேர் தென்பொதி யம்பையில்வாழ்
தேனுர் தார்மார்பா
சங்குவ லம்புரிசூழ் செந்தில்வ ளம்பதியாய்
தாலோ தாலேலோ
சங்கரி தன்குமரா மங்கையர் தங்கணவா
தாலோ தாலேலோ. 5

வேறு.

மரகதவடிவஞ்செங்கதிர்வெயிலால்வாகாய்வாடாதோ
மதிமுகமுழுதுந்தண்டுளிதரவேதார்வேர்சோராதோ
கரமலரணைதந்தின்புறுமடவார்காணுதேபோமோ
கனமணிகுலவுங்குண்டலமரைஞாணோடேபோனல்வார்
பொருமியமுலையுந்தந்திடவுடனேதாய்மார்தேடாரோ
புரவலரெவருங்கண்டடிதொழுவார்போதாய்போதாநீள்
சரவணமருவுந்தண்டமிழ்முருகாதாலோதாலேலோ
சதுமறைபரவுஞ்செந்திலையுடையாய்தாலோதாலேலோ.

வேறு.

கூறுமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா
கூறுமியல் பார்த்தின் மேலே யாரார் பாடாதார்

மேருவரை நாட்டு வாழ்வார் வானு டாள்வார்போல்
வேளையென மீட்டுன் மேலே வீழ்வார் சூழ்வார்பார்
ஆருயிரை பார்த்து நீணீ ரூடே தாராமே
யானகழி நீக்கி மேலே நாவா யோடேசேல்
சேருமலை வாய்க்கும் நாதா தாலோ தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ. 7

வேறு.

அரைவடமுந் தண்டையு மின்புரை யரைமணியுங்
கிண்கிணியுங் கலனணியு மாருவீருர்சீர்
அறுமுகமுந் தொங்கல் சுமந்தபன் னிருகரமும்
குண்டலமுங் குழையழகு மாரார்பாராதார்
விரைபொரு மென்குஞ்சி யலம்பிய புழுதியுமங்
கங்குழைபண் டியுமெலியு மேலேவீழ்வார்பார்
கெகுவிதமுங் கொண்டு தவழ்ந்திடி லவரவர்தங்
கண்கள் படும்பிழை விளையுமே னேகாதே
வரைமணியுந் தங்கமு மொன்றிய கனபரியங்
கந்தனி லின்றுகண் வளரவாராய் வாழ்வேநீ
மணிநகையுங் கொண்டுது யின்றிலை விரலமுதங்
கொண்டுகி டந்தனை மதுரமாய்நீ பேசாயோ
திரைபொருதென்செந்தில்வ ளம்பதி வளரவருங்
கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ
திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையுமிறைஞ்
சம்பரை யம்பிகை சிறுவா தாலோ தாலேலோ. 8

வேறு.

அரவுசிறு பிறையிதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதேர்
அருணவெயி லிரவிசுழ லிமகிரியி லரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே

குருவருள மகிழவுயர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா
குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவுரை
கூறாய் மாறாதே
இரவலரு முனிவர்களு மிமையவரு முனதடிமை
யாமே யாமேநீ
யெமைமுனியிலொருதுணையுமிலையடிமையடிமையென
வீழ்வார் சூழ்வார்பார்
பரசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ. 9

வேறு.

பங்கயன்முதலோ ரிந்திரனிமையோர் பாரோரேனோர்பார்
பண்புடனுனையே சிந்தையினினைவார் பானீமால்கூராய்
வெங்கடகிரிசூ ழெண்டிசையுறைவார் வீணாள்காணாதே
மின்பரிபுரதாள் பொன்புரைமுடிவேல் மெய்வார்வீறாலே
செங்கனிமணிவாய் தங்கியநகைதா தேவாசீறாதே
திண்டிறன் முருகா தண்டமிழ்விரகா சேரார்போரேறே
சங்கரிமருகா சங்கரிசிறுவா தாலோ தாலேலோ
சந்ததமியறேர்செந்திலையுடையாய் தாலோதாலேலோ. 10

தாலப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-30

நான்காவது

சப்பாணிப்பருவம்.

பரவரியநவமணி யழுத்துகல னுக்கழகு
    பாலித்து வீறுபெற்ற
பன்னிரு புயங்குலுங் காமனீள் குழைதொறும்
    பருவயிர குண்டலங்கள்
இரவியொளி மட்கவின் றசையாம லழுதொழுகு
    மிந்துமுக மண்டலத்தி
லெழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர்
    விறைக்கச் சிதைந்திடாமற்
கரகமல மலர்விரல் சிவப்புற மற்கடக
    கங்கண மொலித்திடாமற்
கழிவண் டலம்புங் கருங்குவளை யோடைசூழ்
    கழிதொறுங் கானறேறுந்
தரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா
    சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
    சப்பாணி கொட்டியருளே. 1

அண்டர்தந் துயரொழித் தனமென் றுகொண்டாடி
    யாவலங் கொட்டமன்னும்
அயிராணி கலவியமு துண்டன மெனத்தேவ
    ரரசிரு கரங்கள்கொட்டத்

துண்டவெண் பிறைபுரை யெயிற்றுவெஞ் குருளர்
துண்ணெனப் பறைகொட்டநீள்
சுருதியந் தணரிடந் தொறுமங் கலப்பெருந்
தூரியங் கொட்டமுட்டப்
பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட்டவெம்
பகைநிசா சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
பறைகொட்ட வெள்வளை தருந்
தண்டரள மலைமொண்டு கொட்டுநக ராதிபா
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டியருளே. 2

பௌவமெறி கடலாடை யுலகிலொரு வேடுவன்
பறவைக்கு நிறைபுகுந்த
பார்த்திவன் பாவையு மியர்குலச் சிறையும்
பணித்தருள மதுரைபுக்குத்
தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னுடலுறச்
சென்றுபற் றலுமெவர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனுந்
திருத்தியொரு வாதுவென்று
வெவ்வழலி லெழுதியிடு மேடும் பெருக்காற்று
விட்டதமி ழேடுமொக்க
வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில்
வெய்யசமண் மூகரேறச்

சைவநெறி யீடேற வருகவுணி யக்குழவி
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டியருளே 3

பைந்தா டழைச்சிறைக் கானவா ரணமருவு
பந்தரிடு முல்லைவேலி
பாயுமுட் பணைமருப் பேறுதழு வியுமுடைப்
பாலரு மேனிமடவார்
கொந்தார் குரும்பையிள வனமுலை முகக்கோடு
குத்தக் குருந்தொசித்துங்
குறுங்கழைத் துண்டந் தனிற்சிறு துளைக்கருவி
குன்றுருக நின்றழைக்குஞ்
செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் துஞ்சுருதி
தெரியவிரன் முறையில்விட்டுந்
தேனுவின் பிறகே திரிந்துங் கவுட்குழி
திறந்துமத மாரிசிந்துந்
தந்தாவ ளந்தனக் குதவுதிரு மான்மருக
சப்பாணி கொட்டியருளே
தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டியருளே 4

கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ
கற்பிக்கு மந்த்ரசாலை
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை
கட்டவளர் நந்தன வனஞ்

சீர்கொண்ட புருகூத னுந்தேவர் குழுவுநின்
திருநாம மறவாதபேர்
சிகரகன காசலமு முனதுதிரு வாபரண
சேர்வைசோ பேழைகடனீர்
போர்கொண்ட வேலின் புலால்கழுவு நீரேழு
பொழிலுமத் தனைதீவுமோர்
பொலிவினுட னேநின் கலாபமயில் வையாளி
போய்மீளும் வீதியெனவே
தார்கொண்ட மணிமார்பா செந்தில்வடி வேலனே
சப்பாணி கொட்டியருளே
தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டியருளே

கவளமத வெற்புநிலை யுலகுபர வப்ரபைகொள்
கைத்தா மரைக்கடகபூண்
கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை
கட்டாணி முத்தொளிரவே
பவளவிதழ் புத்தமுத மொழுகுமதலைக்குதலை
பற்பாதி சொற்றெரியவே
பரிபுர மொலிக்கவரு குறுநகை யெழுப்பியிடு
பைச்சேட னுச்சிகுழிபா
யுவளக மனைத்துமின வரிவளை முழக்கவெடி
யுற்றேபெ ருத்த கயல்போ
யொருபுடை குதிக்கவரி பலவனளை யிற்புகுத
வுப்பூறு நெட்டகழிதோய்

கவளமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சப்பாணி கொட்டி யருளே
சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக
சப்பாணி கொட்டியருளே. 6

வேறு.

கருதிய தமனிய மணியரை வடமிடு
கட்டுவ டத்தோடுங்
கழலிடு பரிபுர மொலியெழ மணியுமிழ்
கைக்கடகப்பூணு
மிருசுட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
வெழுமதி புரைதிரு முகமலர் குறுவெயர்
ரிட்டுவ ரத்தாமஞ்
சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றுழத்
தொழுதுணை வழிபடு மடியவ ரிளையவர்
சொற்படி தப்பாமற்
குருமணி யலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி. 7

வரைபுரை புயமிசை யிடுதொடி யணிகலன்
மற்றுள முத்தார
மணிமுடி குழையிடு மிருசிகை யழகெழ
மைக்குவ ளைப்போதின்

விரைசெறி குழலியர் செவிலிய ரவரவர்
மிக்கனி ருப்பானார்
விபுதரு முனிவரு முனதடி பரவியுன்
வெற்றியு ரைப்பார்சீ
ரரைமணி யுடைமணி கணகண கணவென
வத்திமு கத்தானு
மரிபிர மனுமுமை கணவனு மனமகி
ழுற்புவி ளைத்தார்பார்
குரைகட லலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி

வேறு.

சந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள்
கற்பாவெனச் சுருதிநூல்
கண்டித் துரைத்திடவு மிந்தக் கரத்தினுரை
கற்பா னுரைத்தியெனவே
யந்தப் பொருட்பகுதி யந்தத் தினைப்பகரு
மப்போவெ றுத்துமுனிவா
யஞ்சத் திருக்குமய னஞ்சச் சிறைக்குளிடு
மப்பா சிறக்குமமலா
பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர்
பற்றாகநிற்கு முதல்வா
பண்டைக் குடத்தினுறு முண்டச் சிறுத்தமுனி
பற்றாசை யுற்றுமிகவாழ்

கந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமர
சப்பாணி கொட்டியருளே. 9

வேறு.

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர்
பொற்று ளிணைப்பரவவே
புகலரு மிசைதெரி தும்பு ராதியர்
புக்காத ரித்துவரவே
மதுகர மிடறிய தொங்கன் மாலிகை
மற்பூத ரத்தசையவே
மணியொளி வயிரம லம்பு தோள்வளை
மட்டாய் நெருக்கமுறவே
சதுமறை முனிவர்கள் தங்க ளுயக
சப்பாணி கொட்டியருளே
சர்வண பவகுக செந்தில் வேலவ
சப்பாணி கொட்டியருளே. 10

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - 40.

ஐந்தாவது

முத்தப்பருவம்.

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிமுத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

வளைக்குந் தமரக் கருங்கடலின்
வளைவா யுகுத்த மணிமுத்தன்
வடிவேற் கறைபட் டடல்கறுத்து
மாசுபடைத்த மணிமுத்தந்

துளக்குங் கழையிற் பருமுத்தந்
துளபத் தொடைமா லிதழ்பருகித்
தூற்றுந் திவலை தெறித்தமுத்தஞ்
சுரக்கும் புயலிற்சொரிமுத்தந்
திளைக்குங் கவன மயிற்சிறையிற்
சிறுதாட் பொதிந்த குறுமுத்தஞ்
செந்நென் முத்தங் கடைசியர்கா
றேய்த்த முத்தஞ் செழுந்தண்டேன்
முளைக்குங் குமுதக் கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே 2.

கலைப்பால் குறைத்த பிறை முடிக்குங்
கடவு ளுடலின் விளைபோகங்
கனலி கரத்தி லளிக்க வந்தக்
கனலி பொறுக்க மாட்டாமன்
மலைப்பால் விளங்குஞ் சரவ ணத்தில்
வந்து புகுத வோராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைத்த ரறுவர்ப் பயந்தெடுப்பக்
கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி யணைத்துச் சேர வொரு
கோல மாக்கிக் கவுரிதிரு

முலைப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

கத்துங் கடலி னெடும் படவிற்
கழியிற்கழுநீ ரிற்சுழியிற்
கான்ற கரையிற் கரை திகழுங்
கைதைப் பொதும்பிற் சுரும்பினங்கள்
தத்துங் கமலப் பசும் பொகுட்டிற்
சாலிக் குலையிற் சாலடியில்
தழைக்குங் கதலி யடியடவிற்
றழைவைத் துழுத முதுகுரம்பைக்
குத்துந் தரங்கப் புனற்சுவரிற்
குவளைத் தடத்தின் மடைவாயிற்
குடக்கூன் சிறுமுட் பணில மொரு
கோடி கோடி யீற்றுளைந்து
முத்தஞ் சொரியுங் கட லலைவாய்
முதல்வா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மணைத்தினுக்கு
முவல்வா முத்தந் தருகவே

வயலுஞ் செறிந்த கதலிவன
மாடஞ் செறிந்த கதலிவன
மலர்க்கா வெங்குந் தேனினிரை
மாலைதோறுந் தேனினிரை

புயலுஞ் செறிந்த கனகவெயில்
புடையே பரந்த கனகவெயில்
பொதும்பர் தோறு மோதிமமென்
புளினர் தோறு மோதிமஞ்செங்
கயலுஞ் செறிந்த கட்கடையார்
கலவி தரும்போர் கட்கடையார்
கருணை புரியு மடியாருன்
காதல் புரியு மடியார்சீர்
முயலும் படிவாழ் திருச்செந்தூர்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே. 5

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச்
சுரருக் கிறையுஞ் சருமுடன்
சூழ்ந்த கடம்பா டவியிலுறை
சொக்கக் கடவுள் தனைமூன்று
பொழுதும் பரசி யெழுத்தர்சொற்
போலப் பொருளும் புகறியெனப்
புகலு மாறஞ் சிரட்டிதிணைப்
பொருட்சூத் திரத்தின் பொருள்மயங்கா
தெழுதும் பனுவற் பாணன்முத
லேழேழ் பெருமைக் கவிப்புலவர்
இதயங் களிக்க விருப்பமுட
னிறையோன் பொருட்குப் பொருள்விரித்து

முழுதும் பகர்ந்த கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமய மனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

வேறு.

கடுநடைச்சிந் துரம ருப்பின்
கதிர்கொண் முத்துஞ் சரவைநீள்
கடல ளிக்கும் பணில முத்துங்
கழையின் முத்துங் கரடுவா
னுடுமு கட்டம் புயல்க ருக்கொண்
டுமிழு முத்தங் கருகற்றே
னொழுகு பொற்பங் கயமடற்றந்
தொளிரு முத்தந் திருகல்காண்
படுக ரைக்குண் டகழி நத்தின்
பரிய முத்தந் தெரியவே
பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும்
படியின் முத்தஞ் சிறுமகார்
கொடுப ரப்பும் பதிபுரக்குங்
குமர முத்தந் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தந் தருகவே. 7
பருவ முற்றுங் குடவ யிற்றெண்
பணில மொய்க்குந் துறையெலாம்
பருமு ரட்செங் சயல்கு திக்கும்
பலப டத்தெண் டிரைமுநீர்

பொருது குத்துந் திடர ளைத்தும்
    புறவு மொய்க்கும் புறவுசேர்
புளின. வெற்பெங் கனுங்கி ரைக்கும்
    புளின மொய்க்குங் குவளைவா
யருமடற்கண் டினமெ னச்சென்
    றளிகண் மொய்க்கும் புதியகூ
லைவன் மொய்க்குங் குழிவ ழிச்சென்
    றலைசொ ழிக்குங் கரையெலாங்
குருகு மொய்க்கும் பதிபு ரக்குங்
    குமர முத்தந் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
    குழவி முத்தந் தருகவே.

வேறு.

பையரவி னுச்சிகுழி யப்பொருங் குண்டகட்
    படுகடற் பணில முத்தம்
பார்வையா னுஞ்சிறிது பாரோமி தன்றிப்
    பசுங்கழை வெடுத்தமுந்தஞ்
செய்யசிந் தையினுமிது வேணுமென் றொருபொழுது
    சிந்தியோ முத்திவட்டத்
திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச்
    செழுநிலச் சம்பராரி
யெய்யுமலர் வாளியை யெடுத்துத் தெரிந்துநாண்
    இறுகப் பிணித்த வல்வில்
ஈன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றணுகோ
    மிதழ்க்கமல முகையுடைக்குங்

ஐய்யமணி முத்தந் தனைத்தொடோ
முன்னுடைய துகிரில்விளை முத்தமருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது.
துகிரில்விளை முத்தமருளே.

இறுகல்கரு குதல்முரி விலட்சுமி புடாயமுள்
ளேறல்புகை யேறல்செம்ம
ணேறல் வெச் சந்திருகன் மத்தகக் குழிவன்றி
பிரவியொளி பிற்கரத்தன்
மறுவறு தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளைகவிர்ப்ப
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகையளிப்போர்
முறுகல்வலி யேறல்கல் லேறல்சிப் பிப்பத்து
முரிதறிரு குதல்சிவப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
முரிகுதை வடிவொதுங்கல்
திறுமுகங் கக்கலொளி மட்கல்கர பெண்ணைதீ
துகிரில்விளை முத்தமருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தமருளே. 10

கோதிவரி வண்டுமது வுண்டுகுடி கொள்ளுமெங்
குழலுக் குடைந்துவிண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குறுந்துளியி னித்திலக்
கோவையொரு கால்விரும்பேங்

காதினுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங்
கண்ணுக் குடைந்துதொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்டரள மென்னிலொரு
காலமுங் கருதிநயவேம்
போதினுறு பசுமடற் பாளைமென் பூகம்
பொருந்துமெங் கந்தரத்தைப்
பொருவுறு வெள்வலம் புரியார மின்புறேம்
பெற்றோ டனக்குடைந்த
சோதிவேய் முத்தந் தனைத்தொடேம் நின்னுடைய
துகிரில்விளை முத்தமருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தமருளே. 11

முத்தப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-51.

ஆறுவது.

வாரானைப்பருவம்.

மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கச் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்
சேரிக் கருங்கை மள்ளர்குயந்
தீட்டி யரிந்த கொத்தினுக்குத்

தெண்முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோ யவர்குவிப்ப
வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்க ளீற்றுளைந்து
மேட்டி லுகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென
வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 1

புள்ள மரிந்த கதிர்ச்செந்நெற்
போரிற் பகடு தனைநெருங்கப்
பூட்டி யடித்து வைகளைந்து
போதக் குவித்த பொலிக்குவையை
விள்ள வரிய குடகாற்று
வீசப் பதடி தனைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட
மேரு கிரிபோன் மிகத்தூற்றிக்
கள்ளமெறியுங் கருங்கடைக்கட்
கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய வம்முத்தைக்
கண்டு குடித்த கட்குவிலை
மள்ள ரளக்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 2

வாரானைப்பருவம்.

தேட வரிய மணியரைஞாண்
சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலதநுதல்
தீட்ட வருக மறுகில்விளை
யாட வருக மடியிலெடுத்
தணைக்க வருக புதுப்பனிநீ
ராட்ட வருக நெறித்தமுலை
யமுதம் பருகவருக முத்தஞ்
சூட வருக வுடற்புழுதி
துடைக்க வருக வொருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை
தோன்ற வருக சோதிமணி
மாட நெருங்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

இறுகு மரைஞா ணினிப்பூட்டே
னிலங்கு மகர குண்டலத்தை
யெடுத்துக் குறையின் மீதணியே
னினியுன் முகத்துக் கேற்கவொரு
சிறுகுந் திலதந் தணைத்தீட்டேன்
திருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சீறடிக்குச்
சிலம்பு திருத்தே னெறித்துளிம்பி

முறுகுமுலைப்பா லினிதூட்டேன்
　　முகம்பார்த் திருந்து மொழிபகரேன்
முருகா வருக சிவசமய
　　முதல்வா வருக திரைகொழித்து
மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
　　மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
　　வள்ளி கணவா வருகவே.

எள்ளத் தனைவந் துறுபசிக்கு
　　மிரங்கிப் பரந்து சிறுபண்டி
யெக்கிக் குழைந்து மணித்துவர்வா
　　யிதழைக் குவித்து விரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
　　தொட்டி லுதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடவாய் நீரொழுகத்
　　தோளின் மகரக் குழைதவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமுறுவல்
　　விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
　　வேண்டு முமையாள் களபமுலை
வள்ளத் தமுதுண் டகமகிழ்ந்த
　　மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
　　வள்ளி கணவா வருகவே 5

வெண்மைச் சிறைப்புள் ளோதிமங்கள்
விரைக்கே தகையின் மடலெடுத்து
விரும்புங் குழவி யெனமடியின்
மீதே யிருத்திக் கோதாட்டித்
திண்மைச் சுரிசங் கினிற்குவளைத்
தேறன் முகந்து பாலூட்டிச்
செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச்
சேர்த்துத் துயிற்றித் தாலாட்டப்
பெண்மைக் குருகுக் கொருசேவற்
பெரியகுருகு தன்வாயிற்
பெய்யு மிரையைக் கூரலகு
பிளந்து பெட்பி னினிதளிக்கும்
வண்மைப் புதுமைத் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 6

ஓடைக் குளிர்தண் டுளிப்பனியா
லுடைந்து திரையிற் றவழ்ந்தேறி
யொளிரும் புளினத் திடையொதுங்கி
யுறங்கு கமடந் தனைக்கடந்து
கோடைக் குளிர்காற் றடிக்க வுடல்
கொடுகி நடுங்கி யூன்கழிந்த
குடக்கூன் பணிலத் துட்புகுந்து
குஞ்சுக் கிரங்கி யிரைகொடுக்கும்

பேடைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகின் சிறைப்புறத்துப்
பிள்ளைக் குருகு தனையணைத்துப்
பிரச மடற்கே தகைப்பொதும்பின்
வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பை முலை
வள்ளி கணவா வருகவே. 7

விண்டு மாவின் கனி தடத்தின்
மீதே வீழக் முருகினங்கள்
வெருவி யிரியக் கயல்வெகுண்டு
வெடிபோய் மீள மண்டேகங்
கண்டு பாய வரி வாளை
கழிக்கே பாயக் கழிக்கானற்
கம்புள் வெகுண்டு துண்ணெனக்கட்
கடைதான் விழித்துத் தன்பார்ப்பைக்
கொண்டு போயக் கரு வாளைக்
குலைக்கே பாயக் குடக்கனியின்
குறுங்காற் பலவு வேர்சாய்ந்த
குழிக்கே கோடி கோடிவரி
வண்டுபாயுந் திருச்செந்தூர்
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 8

பேரா தரிக்கு மடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா வென்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 9

17885
-600 008

வேறு.

கலைதெரிபுகலி வளமுறமருவு கவுணியவருக வருகவே
கருணையி னுரிமை யடியவர்கொடிய கலிகெடவருகவருகவே
சிலைபொருபுருவ வனிதையரறுவர் திருவுளமகிழ வருகவே
சிறுதுளிவெயர்வு குதிகொளவுனது திருமுகமலரவருகவே
கொலைபுரிவிகட மணிமுடிநிருதர் குலமறவருக வருகவே
குருமணிவயிர மிருசிகைநெடிய குழைபொரவருகவருகவே
மலைமகள்கவுரி திருமுலைபருக மழவிடைவருக வருகவே
வளையுமிழ்தரள மலையெறிநகரில் வரபதிவருக வருகவே. 10

அணிநெடுமவலி யெறிசிறுபுழுதி யழகுடனெழுக வருகவே
அடியிடுமளவி லரைமணிமுரலு மரவொலிபெருக வருகவே
பணிவிடைபுரிய வருமடமகளிர் பரவினர்புகழ வருகவே
பலபலமுனிவ ரனைவருமுனது பதமலர்பரவ வருகவே
பிணிமுகமுதுகி லரியணையழகு பெறவருமுருக வருகவே
பிறைபொருசடிலர் தமதிடமருவு பிடிபெறுகளிறுவருகவே
மணியிதமொழுகு மமுதகுகுதலைமழவிடை வருகவருகவே
வளையுமிழ்தரள மலையெறிநகரில் வரபதி வருக வருகவே. 11

வாரானைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-62.

ஏழாவது.

அம்புலிப்பருவம்.

கலையா னிரம்பாத கலையுண் டுனக்குநிறை
கலையுண் டிவன்றனக்குக்
களங்கமரு குறைமா னுனக்குண்டு குறைமான்
கருத்துண் டிவன்றனக்குத்
தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணக்
தொகையுண் டிவன்றனக்குத்
துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாருத
சொல்லமுத முண்டுனக்குக்
கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கட்செவிக்

கோளரா வைக்குத்தி யெறியுமே காரமிக்
குமரனுக் குண்டுகண்டாய்
அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீ யாடவாவே. 1

மாமோக மண்டல மகற்றியறி வென்னுமுழு
மண்டலத் தைத்தொடுத்து
வடவைமுக மண்டலத் தழலானு ருக்கியினன்
மண்டலத் தூடுபுக்குச்
சோமோத யக்கிரண மண்டலத் தமுதத்
துளித்திவலை பருகியுடலைச்
சோதிமண் டலமென விளக்குமவ ரிவனுடைய
துய்யமுக மண்டலத்தை
யேமோ கருத்துற விருத்திப் பெரும்பரத்
தெல்லைமண் டலமெய்தலா
மென்றுமெருண் டிவன்மண் டலச்சக்ர நிலையா
றெழுத்திலீ டேறுவருனக்
காமோ பெருக்கமென் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அரவின்முடி நெடியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீயாட வாவே. 2

முதிருமிசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்க்குமிரு நாலிதழ்க்குள்

முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குள்மலர்
முகமண் டலத்துவெயிலா
லெதிருமிரு ளந்தகா ரப்படலை தள்ளிவந்
தெழுமிரவி மண்டலத்தி
னின்புற்று நீவந் தொளிக்குமிட மந்தவா
னிரவிமண் டலமுடுக்க
னாதிருமடு செருவிலிவன் வேலேறுபட்டவ
ருகந்தபெரு வெளியாகையா
லொள்ளமு துகுத்தபதி னாறுகலை கொள்ளுமுன்
னுடலினுங் குறைபடாதோ
அதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
னம்புலீ யாடவாவே. 3

வெறியா ரிலைத்தொடைத் தக்கனழல் வேள்வியை
வெகுண்டுபகல் பல்லுகுத்து
வெள்ளிவிழி யைக்கெடுத் தயிரா வதப்பாகன்
வேறுருக் கொடுபறக்கச்
செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன்
சென்னியைத் திருகிவாணி
செய்யதுண் டந்துண்ட மாக்கியத் தக்கன்
சிரத்தையொரு வழிபடுத்திப்
பொறியா ரழற்கடவுள் கைத்தல மறுத்துவிட
புலவர்முப் பத்துமூவர்
போனவழி யொருவாபோ காமலுன் னுடலையும்
புழுதியிற் றேய்த்ததெல்லாம்

அறியாத தல்லநீ செந்தில்வடி வேலனுட
　　னம்புலீ யாடவாவே
அரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
　　னம்புலீ யாடவாவே. 4

விடமொழுகு துளைமுள் ளெயிற்றுவன் கட்செவி
　　விரிக்கும் பணாடவியரு
மென்பொறி யுடற்பெரும் பகுவா யராவடிவை
　　வெம்பசி யெடுத்துவெம்பிக்
குடதிசைக் கோடையைப் மருகிக் குணக்கெழுங்
　　கொண்டலை யருந்திவாடைக்
கொழுந்தையுந் தென்றலையு மள்ளிக் குடித்துக்
　　கொழுங்கதிரை யுண்டதினியுன்
னிடமொழிய வேறோ ரிலக்கில்லை நீயதற்
　　கெதிர்நிற்க வல்லையல்லை
யிவனுடன் கூடிவிளை யாடிநீ யிங்கே
　　யிருக்கலா மிங்குவந்தால்
அடல்புனையு மயிலுண் டுனக்குதவி யாகையா
　　லம்புலீ யாடவாவே
அரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட
　　னம்புலீ யாடவாவே. 5

பண்டுபோ லின்னமுத மின்னுங் கடைந்திடப்
　　பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி யளறுக வற்றியிப்
　　பாரினிற் றிடரானதோ

விண்டலத் தமரர்களு மமரேச னுஞ்சேர
வீடிநீ டந்தகார
மேவியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ
விடமொழுகு நெட்டெயிற்று
மண்டுவா சுகிதுண்ட மானதோ வின்னுமொரு
வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே யிவனிளந் தாலெந்த
வகைசெலா தாகையானீ
அண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே. 6

வட்டமா கத்துள்வெளி வடிவுகொள லாலென்று
மானைத் தரித்திடுகையான்
மந்தா கினித்தரங் கத்துவள மெய்தலான்
மன்னுங் கணஞ்சூழ்தலா
லிட்டமொடு பேரிரவில் வீறுபெற லுலகி
லெவருந் துதித்திடுதலா
லிரவிகண் ணுறுதலா னிடபத்தி லேறலா
லேமமால் வரையெய்தலால்
முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்வெய்ய
மூரியர வுக்குடைதலால்
முக்கணுமை பங்கனொ ரொக்குநீ யென்றுதிரு
முகமலர்ந் துனையழைத்தால்

அட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே 7

காதலா லெறிதிரைக் கடன்மகளிர் சிறுமகார்
கரையிற் குவித்தமுத்துங்
கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமுட்
கண்டன்மடல் விண்டகண்ணத்
தாதலா விளவாடை கொடுவருங் கானல்வெண்
சங்குநொந் தீற்றுளேந்து
தனியே யுகுத்தபரு முத்தமுந் தன்னிலே
சதகோடி நிலவெறிக்கு
மீதலா லொருசிறிது மிரவில்லை யெவருக்கு
மிரவில்லை நீயுமிங்கே
யேகினு னுனதுடற் கறைதுடைத் திடுதலா
மென்பதற் கையமில்லை
ஆதலா னீதி[illegible] செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே. 8

கடியவளி யெறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
கருடவா கனனுமிகல்கூர்
கட்டைமுள் ளரைநாள நெட்டித ழுடுத்தபொற்
கமலயோ னியுமெழுந்து

கொடியவெங் கொலைபுரி வராகமென வொருவனெழு
குவலைய மிடந்துதேடக்
குறித்தொருவ னெகினமா யண்டபகி ரண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட
முடியவிது காறுமவ ரறிவுறு வகைநின்ற
முழுமுதற் கடவுளடியும்
முடியும்நீ கண்டனை யெனக்கருதி யின்றுதிரு
முகமலர்ந் துனையழைத்தால்
அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் டுடுடுடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே. 9

பெரியமா கத்துணீ வருவையிவன் வஞ்சகம்
பேசுமா கத்துள்வாரான்
பெருகநீ வேலையிற் புகுவா யிவன்பார்
பிளக்கவோ வேலைவிட்டான்
உரியமா குணவரையி லுறுவைநீ யிவனன்
புறுதகுண வரையேயுறுன்
உடலிலே முழுமறு வுனக்குண் டிவன்றனக்
கொருமறுவு மில்லைமீளக்
கரியமா முகிலிலே மறைவைநீ யிவனெடுங்
கரியமாமுகிலின் மறையான்
கருதிநீ யிவையெலா முணரிவன் பெருமையைக்
கண்டுநீ யங்கிராதே

அரியமா தவனெங்கள் செந்தில்வடி வேலனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே. 10

பரியநிழல் தன்னைச் சுளித்துவெயி லொடுபொருது
பாதசங் கிலியைநூறிப்
பாரிசா தத்தருவை யிடுகுள கெனக்கவுட்
பகுவாய் புகக்குதட்டித்
தரியலர் நகர்ப்புறத் தெயிலிடு கபாடந்
தனைத்தாள் படுத்தியவர்பொற்
றருணமணி முடியிடறி முறைமுறை யழைக்குந்
தழைச்செவிப் பிறைமருப்புச்
சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொலைத்
துடியடிப் புகரொருத்த
துங்கவே ளிவனுடைய முன்றிற் புறத்திற்
றிளக்கர நிமிர்ந்துநிற்கும்
அரியகரு நாகமென வெருவல்கொல் லிவனுட
னம்புலீ யாடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட
னம்புலீ யாடவாவே. 11

அம்புலிப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-73.

எட்டாவது

சிறுபறைப் பருவம்.

பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப்
பூபால ரேறுமந்தப்
பூபால னுக்கிளைய துணைவர்நூற் றுவரும்
பொருபதினெட் டக்குரோணி
யொருவாய்மை சொற்றபடை வீரருஞ் செருவினி
லுருத்தெழலு நீதியைவ
ருடனுக நின்றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசா ரதியாகியம்
மருவார்க டானையிற் பட்டவர்த் தனர்மகுட
வர்த்தன ரடங்கலும்போய்
மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக
மண்ணேழு முண்டுமிழ்ந்த
திருவாய் வலம்புரி முழக்குதிரு மான்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 1

முருந்தாரு மணிமுறுவ னெய்தனில மகளிரிள
முகிழ்முலை தனக்குடைந்து
முளரிமுகை நீரிற் குளித்துநின் றொருதாளின்
முற்றிய தவம்புரியவெங்

கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருங்
கட்கடைக் குள்ளுடைந்து
காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு
கரியமுகி லுடல்வெளுத்துப்
பொருந்தாம லோடியந் தரசாரி யாயொரு
பொருப்பேற வளமையேறும்
புகழேற வாழுந் திருச்செந்தி லாயுனது
பொற்றாள் வணக்கமுற்றுத்
திருந்தார்கணெஞ்சம் பெரும்பறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 2

கங்கையணி புஞ்சடையில் வைத்தகுழ விப்பிறைக்
கடவுளா லயமனைத்துங்
கங்குற் கருங்கடல் கழிந்தவை கறையிற்
கலித்தவால் வளைமுழக்கும்
பங்கய மலர்ப்பொகுட் டிதள்வாய் துளிக்கும்
பசுந்தேற லுண்டுமெள்ளப்
பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு
படிந்துபல கான்முழக்கும்
வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்துவெளி
மேகநீ ரைக்குடித்து
வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும்வெறி
வெண்டிரைக் குண்டகழியிற்

செங்கயல் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 3

காவான பாரிசா தத்தருக் குலகிழற்
கடவுள்தெரு வீதிதோறுங்
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுங்கை
கட்டவிழ்த் திதழுடைக்கும்
பூவா ரிலைத்தொடைய லளகாபுரேசன்
புரந்தொறுங் குளிறுமுரசம்
பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப்
பொங்குதெண் டிசைமுழக்கப்
பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்கப்
பரவரிய திருவிழா வென்றுபல பல்லியம்
பட்டினந் தொறுமுழக்கத்
தேவாதி தேவருயர் சதுமறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 4

வரைவாய் முழக்குங் கடயானை வெங்கூன்
மருப்பில்விளை முத்துமிளவேய்
மணிமுத்து மடுபாலை வனசுரத்திற்கரு
வராகத்தின் முத்துமண்ட

நுரைவாய் முழக்கும் பெரும்புறவி னுந்திரத்
துமிழுமணி முத்துமள்ள
ரொளியரு மருதவே லிச்செந்நெல் கன்னற்கு
மொளிமுத்து மோங்குநெய்தற்
களைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலங்
கடுஞ்சூ லுளைந்துகான்ற
கதிர்முத்து மொக்கக் கொழித்துவருபொருநையாய்
கழிதொறுங் கயல்குதிக்கத்
திரைவாய் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே 5
சிறுபறை முழக்கியருளே.

முனைவாளை வடிவேலை வடுவைவெங் கடுவையிதழ்
முளரியைப் பிணையைமதவேள்
மோகவா ளியையடு சகோரத்தை வென்றுகுழை
முட்டிமீ ளுங்கண்மடவார்
நினைவாளை நாண்முறுவ லாடியிள முலையானை
நேர்நேர் நிறுத்திநெய்தல்
நீடுமள காடவி வனத்திற் பிணித்துவெண்
நித்தில வடந்தெரிந்து
புனைவாளை நாண்முடி விளம்பிநடு வாளைமென்
போதினுறை வாளையொப்புப்
பொலிவாளை நின்றுகளை களைவாடி நாடிவிளை
போங்கழி கடந்துவெள்ளச்

சினைவாளை பாயுந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 6

அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி
ராடுமணி யூசல்சிற்றி
லம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சரா
ளருவிபாய் பரங்கிரியுமுட்
புறந்தரு புனிற்றுவெள் வளைகடற் றிரைதொறும்
பொருதசீ ரலைவாயுமென்
பொதுகமழ் திருவா வினன்குடியு மரியமறை
புகலுமே ரகமுமினிமைக்
குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாடலுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட
குஞ்சரம் பிளிறுமரவஞ்
சிறந்தபழ முதிர்சோலை மலையும்புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 7

எழுமிரவி மட்கவொளி தருமணி யழுத்துமுடி
யிமையவர் மகிழ்ச்சிபெறவே
பிருகுழை பிடித்தவிழி யரமகளிர் சுற்றிநட
மிதுவென நடித்துவரவே

வழுவறு தமிழ்ப்பனுவல் முறைமுறை யுரைத்துவெகு
வரகவிஞ ருட்குழையவே
மகபதியு மிக்கமுனி வரர்கணமு மிச்சையுடன்
வழியடிமை செப்பியிடவே
பொழுதுதொறு மொக்கவிதி முறையுனையருச்சனைசெய்
புனிதசிவ விப்ரருடனே
புகலரிய பத்தசன மரகர வெனக்குலவு
புரவலர் விருப்பமுறவே
செழுமறை முழக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே. 8

தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு
தருணவட வெற்பசையவே
தமரதிமி ரத்துமித மெறியுமக ரப்பெரிய
சலதியொலி யற்றவியவே
புவனமுழு தீர்க்கமணி முடிமிசை யிருத்துபல
பொறியுரக னச்சமுறவே
புணரியிடை வற்றவெகு மொகுமொகு வெனப்பருகு
புயலுருமும் வெட்கிவிடவே
பவனனு மிகுத்தசடை யுகமுடி வெனப்பெருமை
பரவியடி யிற்பணியவே
படகநிபி டத்துழனி யசுரர்வெரு விக்கரிய
பரியவரையிற் புகுதவே

சிவனருள் மதிக்கவரு முருககும ரக்கடவுள்
  சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
  சிறுபறை முழக்கியருளே. 9

சகரமக ரச்சலதி யுலகுதனி லிப்பொழுது
  சருவிய புறச்சமயநூல்
தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு
  தவநெறி தழைத்துவரவே
யகரவுக ரத்தில்விளை பொருளடைவு பத்தியுறு
  மடியவர் தமக்கருளவே
யமரருல கத்தவரு மெவருமரு விப்பரவி
  யடியிணை தனைப்பணியவே
பகரவு நினைத்திடவு மரிதுனது சொற்பெருமை
  பரகதி யளிக்குமெனவே
பலபல முனித்தலைவ ரனைவரு முனக்கினிய
  பணிவிடை தனைப்புரியவே
சிகரபர வெற்பில்வரு முருககும ரக்கடவுள்
  சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
  சிறுபறை முழக்கியருளே. 10

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-83

ஒன்பதாவது

சிற்றிற்பருவம்.

பொன்னி மணக்கும் புதுப்புனலிற்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமமைத்துக்
கன்னி மணக்குங் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தே னுலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்
பன்னி மணக்கும் புதுப்பொழிலிற்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாரா யயிரா வதப்பாகன்
சென்னி மணக்குஞ் சேவடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 1

தையன் மடவா ரிழைத்தவண்டல்
தன்னை யழிக்கு மதுக்கல்ல
தரள முறுத்தி யுனதுபொற்பூந்
தண்டைத் திருத்தாள் தடியாதோ

தூய்ய தவளப் பிறைமுடிக்குஞ்
சோதி யெடுத்து முகந்தணைத்துத்
தோளி லிருத்தும் பொழுதுமணித்
தோளிற் புழுதி தோயாதோ
வைய மனைத்து மீன்றெடுத்தும்
வயது முதிரா மடப்பாவை
மடியி லிருத்தி முலையூட்டி
வதனத் தணைக்கி லுன்கழற்காற்
செய்ய சிறுதாள் செறியாதோ
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

தெளவுங் கரட மடையுடைக்குந்
தந்திப் பகடு பிடிபட்டுத்
கருவு மமுது மிருநிதியுங்
தனியே கொள்ளை போகாமல்
லெவ்வ முறவிட் புலத்தமர
ரேக்க முறும லயிராணி
பிடிமங் கலநா ணழியாம
லிமையோ ரிறைஞ்சு மரமகளிர்
வெளவ மெறியுந் துயராழிப்
பழுவத் தழுந்தி முழுகாமற்
பரக்குஞ் சுருதித் துறைவேள்வி
பழுதா காமற் பரவரிய

தெவ்வர் புரத்தை யிடுஞ்சிறுவர்
சிறியேஞ் சிற்றில் சிதையாலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 3

ஆடுங் கொடித்தே ரெழுபுரவி
யருணா னடத்து மகலிடத்தை
யடைவே படைத்தும் படைத்தபடி
யளித்துந் துடைத்தும் முத்தொழிலுங்
கூடும் பெருமை யுனக்குளது
கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக்
கொள்ளுங் கருத்து நின்கருத்துக்
கொங்கை சுமந்து கொடிமருங்குல்
வாடுங் கலசு விழிமடவார்
மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து
வண்ட லிழைத்த மனையழிக்கை
வம்போ சுரரு மகவானுந்
தேடுங் கமலத் திருத்தாளாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 4

புற்றி லரவந் தனைப்புனைந்த
புனித ருடனே வீற்றிருக்கப்
பொலியுந் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்

சுற்றில் வளர்ந்த வரையனைத்துஞ்
சுவர்க்கா லாக்கிச் சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுந்தோ ரணக்கா லெனநாட்டி
மற்றி லுவமை யெனுங்கனக
வரையைத் துளைத்து வழியாக்கி
மாக முகிலை விதான மென
வகுத்து மடவா ருடன்கூடிச்
சிற்றி லிழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 5

மிஞ்சுங் கனக மணித்தொட்டின்
மீதே யிருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக்கேட்டு
நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவா யெனப்புகன்று
நித்த லுனது பணிவிடையி
னிலைமை குலையே நீயறிவாய்
பிஞ்சு மதியி னொருமருப்புப்
பிறங்கு மிருதாட் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்ம தத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகும்

அஞ்சு கரக்குஞ் சரத்துணையே
யடியேஞ் சிற்றி லழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூ
ரரசே சிற்றி லழியேலே. 6

தின்று திரைக்குண் டகழ்மடுவிற்
சூர ளெளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியு மவரிருந்து
துய்த்த வளமுந் தூளாக்கி
வென்று செருவிற் பொருதழித்தாய்
வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெகுண்டு மீண்டளித்தாய்
வேண்டு மடியார் வினையொழித்தாய்
கன்று மமணர் கழுவேறக்
காழிப்பதியில் வந்துதித்துக்
கள்ளப் பரச மயக் குறும்பர்
கலக மொழித்துக் கட்டழித்தாய்
அன்று தொடுத்துன் வழியடிமை
யடியேஞ் சிற்றில் சிதையேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூ
ரரசே சிற்றில் சிதையேலே. 7

களிப்பா ருனைக்கண் டவரவரே
கண்ணு மனமும் வேறுகிக்
கள்ள னிவனை நம்முடைய
காதல் வலையிற் கட்டுமென

விளிப்பார் விரக மங்குரித்த
 வேடப் பலிப்பைப் பாரென்று
மெள்ள நகைப்பா ரிவருடனே
 விளையா டாமல் வேருகித்
துளிப்பார் திரைக்குண் டகழுடுத்த
 தொல்லைப் பதியும் பகிரண்டத்
தொகையுந் தொகையில் பல்லுயிருந்
 தோற்ற மொடுக்கந் துணையாய்நின்
றளிப்பா யழிக்கை கடனலகா
 ணடியேஞ் சிற்றி லழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூ
 ரரசே சிற்றி லழியேலே. 8

கூவிப் பரிந்து முத்தாயர்
 கூட்டி யெடுத்து முலையூட்டிக்
குடுமி திருத்தி மலர் சொருகிக்
 கோலம் புனைந்து கொண்டாடிப்
பூவிற் பொலிந்த திருமேனிப்
 புனிதா வண்டற் புறத்தெயிலிற்
புகுந்தா லினியுன் னுடலேறப்
 புழுதி யிறைத்துப் போகாமற்
காவிக் குறுந்தொட் டிதழ்நெருக்குங்
 கண்ணி தனைக்கொண் டோச்சிவளைக்
கானற் றரளத் தொடையாலுன்
 கைத்தா மரையைக் கட்டிவிடோம்

ஆவித் துணையே வழியடிமை
யடியேஞ் சிற்றில ழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூ
ரரசே சிற்றி லழியேலே. 9

பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையி னீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி யெடுத்து முலையூட்டி
மெய்யா லணைத்து மறுகுதனில்
விட்டா ரவரை வெருமனுன்னை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்
கையா லிழைத்த சிற்றிலைநின்
காலா லழிக்கை கடனலகாண்
காப்பா னழிக்கத் தொடங்கிலெங்கள்
கவலை யெவரேர டினியுரைப்போம்
ஐயா வுனதுவழியடிமை
யடியேஞ் சிற்றி லழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூ
ரரசே சிற்றி லழியேலே. 10

சிற்றிற்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-93.

பத்தாவது

சிறுதேர்ப்பருவம்.

தண்டே னுடைந்தொழுகு மருமாலை நீண்முடி
தரிக்குஞ் சதக்கிருதுசெந்
தருணமணி யாசனத் தேறமா தலிசெழுத்
தமனியத்தேருருட்டப்
பண்டே பழம்பகை நிசாசரர்க ளுட்கப்
பரப்புநிலை கெட்டதென்று
பரவுங்கு பேரன்வட பூதரம் பொருபுட்
பகத்தே ருருட்டவீறு
கொண்டே யுதித்தசெங் கதிரா யிரக்கடவுள்
குண்டலந் திருவில்வீசக்
கோலப்ர பாமண்ட லச்சுடர் துளக்கமுட்
கோலெடுத் தருணவருணன்
திண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதே ருருட்டியருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டியருளே. 1

வாராரு மிளமுலை முடைத்துகிற் பொதுவியர்
மனைக்குட் பகுந்துமெள்ள
வைத்தவெண் டயிருண்டு குடமுருட் டிப்பெருக
வாரிவெண் ணெயையுருட்டிப்

பாராம லுண்டுசெங் கனிவாய் துடைத்துப்
பருஞ்சகடு தன்னையன்று
பரிபுரத் தாளா லுருட்டிவிளை யாடுமொரு
பச்சைமான் மருகபத்தி
பாராமை கூருமடி யவர்பழ வினைக்குறும்
பறவே யுருட்டிமேலை
யண்டபகி ரண்டமு மனைத்துலக முஞ்செல்லு
மாணையா ழியையுருட்டிச்
சேராநி சாசரர் சிரக்குவ டுருட்டநீ
சிறுதே ருருட்டியருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டியருளே. 2

கொந்தவிழ் தடஞ்சாரன் மலயமால் வரைநெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்று மாடகப் பசுநிறங்
கொண்டுவிளை யும்பருவரைச்
சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பருமியற்
தண்பொருநை மாநதியுமத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச்
சாலிநெற் குலைபடர்ந்து
முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு
முளிக்கரும் பைக்கறித்து
முலைநெறிக் கும்புனிற் றெருமைவா யுஞ்சிறுவர்
மொழியும் பரந்தவழியுஞ்

செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுதே ருருட்டியருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டியருளே. 3

பெருமையுட னீடலத் திருவர்பர சமயமும்
பேதழ் பிதற்றிவிட்ட
பிறைமருப் புக்கரும் பகடுமுந் நீரிற்
பிழைத்துநீள் கரையிலேறப்
பொருவருஞ் சன்னிதியி லெய்துவது போன்மணி
புடைக்குமிள நீரிரண்டு
புணரியின் மிதந்துசன் னிதியேற விந்நாட்
பொருந்தவிளை யாடிமுன்னை
யிருதிரையி னிற்சந் தனக்கொடி மரத்தினை
யிழுத்துவரு பெருமையேற்றை
யெப்பொழுது முதியகற் பகடாக வுலகத்தி
லியாவருங் காணவென்று
திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல்கண்டநீ
சிறுதே ருருட்டியருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டியருளே. 4

ஆதிநூன் மரபாகி யதனுறும் பொருளாகி
யல்லவை யனைத்துமாகி
யளவினுக் களவாகி யணுவினுக் கணுவா
யனைத்துயிரு மாகி யதனின்

சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்கள்
தானாகி நானாகிமெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலையாகி
யோதிய தனைத்தினு மடங்காமல் வேறாகி
யுள்ளும் புறம்புமாகி
யொளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிட
மொப்புவித் தென்னையிருத்தித்
தீதினை யகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறுதே ருருட்டியருளே
சேவற்ப தாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே. 5

வேறு.

புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூஷண சூரன்
சலமொ ழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாட்சர காங்கேய
குலவு கொற்றவ குமாரகண் டீரவ
குருபர புருகூத
னுலக ளித்தவா செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. 6

வீதி மங்கல விழாவணி விரும்பிய
விண்ணவ ராமாதர்
சோதி மங்கல கலசகுங் குமமுலை
தோய்ந்தகங் களிகூரச்
சாதி மங்கல வலம்புரி யினமெனத்
தழைச்சிறை யொடுபுல்லி
யோதி மந்துயில் செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. 7

வரைத்த டம்பொழில் வரைமணி யாசனத்
திருந்துவிண் ணவர்போற்றி
வரைத்த டம்புரை மழவிடை யெம்பிரான்
மனமகிழ்ந் திடவாக்கா
லுரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற்
றதுபொரு ளெனமேனா
ளுரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. 8

மாது நாயக மெனவடி வுடையசீர்
வள்ளிநா யகமண்ணி
லீது நாயக மெனவுனை யன்றிவே
றெண்ணநா யகமுண்டோ

போது நாயகன் புணரியினையகன்
பொருப்புநா யகன்போற்றி
ஓது நாயக செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. 9

தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந்
தானநா யகர்தம்பேர்
திக்க னைத்தினு மெண்முத லிமையோர்
தேவர்தந் திருமேனி
மிக்க மாளிகை தருபவ ரடியவர்
மின்னனார் சமயத்தோர்
ஒக்க வாழ்வெனச் செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. 10

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

ஆகப் பருவம் 10-க்குத் திருவிருத்தம்-103.

சிறப்புப்பாயிரவிருத்தம்-3.

ஆகத் திருவிருத்தம்-106.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

17885

வந்து விட்டது! உ வந்து விட்டது!!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள, கன்னிச்சமீன் சரபம்

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்குள் இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச் செய்து உலகத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள் எனினும், அவை "தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவை அல்ல" என்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் பரவி நடிக்கும் நாடகத்தார் முதலிய நண்பர் பலரும் விரும்பியவண்ணம் சிருங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ஏற்றவாறு இந்துஸ்தான், பார்ஸி, கெஜல், டோமரி தில்லானா, டப்பா, திருப்புகழ், வண்ணம் முதலிய பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக நடைபெறுவதுபோலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்ட சாதுரிய மாதுரிய சரபம், **உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களாலியற்றப்பெற்று** உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரிக்கச்செய்து, சொற்பக் காப்பிகளே தயாரித்திருக்கிறோம். புத்தகத்திற்கு முந்துங்கள். விலை ரூபா 2.

பக்திரஸக் கீர்த்தனங்கள் ஷை யாரியற்றியது	0—4—0
ஷை இரண்டாம்பாகம்	0—4—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.

வந்து விட்டது!   வந்து விட்டது!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள சன்னிச்சமீன் சரபம்
உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்!   புத்தகத்திற்கு   முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமி
யார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச
புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்
காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச் செய்து உல
கத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள் எனினும், அவை "தற்கால
நாகரிகத்திற்கு அநுகூலமானவை அல்ல" என்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் பரவி நடிக்கும் நாடகத்தார் முதலிய
நண்பர் பலரும் விரும்பியவண்ணம் சிருங்காரம், வீரம், சோகம்
என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ஏற்றவாறு இந்
துஸ்தான், பார்ஸி, கெஜல், டோமரி, தில்லானா, டப்பா, திருப்
புகழ், வண்ணம் முதலிய பற்பல அற்புத வர்ணமெட்டுகளா லியற்
றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக
நடைபெறுவதுபோலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த
செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்ட சாதுரிய மாதுரிய
சரபம், உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களாலியற்றப்பெற்று
உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்தி
ரப்படங்களால் அலங்கரிக்கச்செய்து, சொற்பக் காப்பிகளே தயா
ரித்திருக்கிறோம். புத்தகத்திற்கு முந்துங்கள்.   விலை ரூ 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புத்தகவியாபாரம், புதுமண்டபம்,
மதுரை.

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்வான்,

ஸ்ரீமான், சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான,

சந்தச்சரபம், ஷண்முகதாஸரவர்களியற்றிய,

பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான **தமாஷ்! தமாஷ்!!** எல்லாம் **தமாஷான** பாடல்கள். **இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள்.** முத்தியை வேண்டிப் பக்தி புரிவார்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்திற்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு, சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும்சந்தப்பாடல்கள் நிறைந்த **இப் பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்** படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சிமிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதிதாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. படிக்கப் படிக்கத் திகட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழேவைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக்காப்பிகளே தயாரில் இருக்கின்றன

விலை அணா 5.

காந்தி மஹான் முதலிய தேசாபிமானிகள் தியானம், மதுவிலக்கு, அன்னிய ஆடையை அறவே ஒழித்தல் விலை அணா 0 1 0.